# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081631

1. District : மாவட்டம் மதுரை PS: காவல்நிலையம் [illegible] Year: ஆண்டு 2022 FIR No: மு.த.அ. எண் 06/2022 Date: நாள் 23/08/22

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: u/s 7 a PC Act 1988 as amended by the PC (amendment) Act 2018.
(ii) Act சட்டம்: PC Act 1988 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18/08/2022 at about 15:00 hrs Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 22/08/2022 at about 12:00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23/08/2022 Time நேரம் : 09:00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23/08/2022 Time நேரம் : 09:45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வடகிழக்கே சுமார் 30 கி.மீ, தாலுகா அலுவலகம், மேலூர் மதுரை மாவட்டம்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. பிரபு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் செல்வம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி கதவு எண் 53, கருத்தப்புளியம்பட்டி, நடுத்தெரு, மேலூர், மதுரை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. மணிகண்டன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மேலூர், மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
——

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 23.8.2022

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 23.08.2022
Inspector V K Ac Ndu

Name: பெயர் P. M. RAJESH PRABHU
Rank: நிலை Inspector No. எண் of Police
V K AC
Nandwal

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.08.2022 at
10:40 hrs.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,</u>

இன்று 23.08.2022-ஆம் தேதி காலை 09.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியிலிருந்த போது, மதுரை மாவட்டம், மேலூர், நடுத்தெரு, கருத்தம்புளியம்பட்டி, கதவு எண். 53 என்ற முகவரியில் வசிக்கும் S.பிரபு த/பெ. செல்வம் என்பவர் ஆஜராகி எழுத்துபூர்வமான புகார் மனுவை கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புனர், S.பிரபு, த.பெ. செல்வம், கதவு எண்.53, கருத்தம்புளியம்பட்டி, நடுத்தெரு, மேலூர், மதுரை மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. நான் மேலூர் நகராட்சி 25வது வார்டு கருத்தம்புளியம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனது மனைவி பெயர் மாலதி. எனது மனைவி பெயரில் கருத்தம்புளியம்பட்டியில் டவுன் சர்வே எண்.20/14, 20/10, 20/15, 20/4 மொத்தம் சுமார் 73 செண்ட் விவசாய நிலம் உள்ளது. அதில் நான் விவாசயம் செய்து வருகிறேன். அந்த இடத்தின் பெயரில் ரூபாய் ஏழு இலட்சம் விவசாய கடன் பெறுவதற்காக நான் கடந்த ஜூன் மாதத்தில் மேலூர் சிவகங்கை ரோட்டில் உள்ள மகேந்திரா தனியார் வங்கிக்கு சென்று அங்கிருந்த வங்கி ஊழியரிடம் எனது மனைவியின் பெயரில் உள்ள இடத்திற்கு ரூபாய் ஏழு இலட்சம் விவசாய கடன் வேண்டுமென கேட்டேன். அதற்கு அவர்கள் மேலூர் வட்டாட்சியரிடமிருந்து செல்வ நிலை சான்றிதழ் பெற்று வரச்சொன்னார். அதன்காரணமாக நான் கடந்த 11.06.2022ம் தேதியன்று மேலூர் தாலுகா அலுவலக வளாகத்தில் உள்ள இ.சேவை மையத்தில் ஆன்லைன் மூலமாக ரூ.60/- செலுத்தி எனது மனைவியின் பெயரில் உள்ள நிலத்திற்கு ரூபாய் ஏழு இலட்சத்திற்கான செல்வ நிலை சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்தேன். அத்துடன் எனது மனைவி பெயரில் உள்ள ஆதார் அட்டை, அவரது நிலத்திற்கான பட்டா, சிட்டா மற்றும் வில்லங்க சான்றிதழ்களின் நகல்களை இணைத்து விண்ணப்பம் செய்திருந்தேன். அந்த விண்ணப்பத்தின் எண்.TN-1720220611102 ஆகும். அதற்கு ஒப்புகை சீட்டு வழங்கினார்கள். அதற்காக மேலூர் கருத்தம்புளியம்பட்டியை சேர்ந்த பெண் கிராம நிர்வாக அலுவலரை சந்தித்து நான் எனது மனைவியின் பெயரில் மகேந்திரா தனியார் வங்கியில் விவசாய கடன் வாங்குவதற்காக ரூபாய் ஏழு இலட்சத்திற்கான செல்வ நிலை சான்றிதழ் பெறுவதற்காக ஆன்லைனில் விண்ணப்பம் செய்த விபரத்தை கூறினேன். அவர் எனது மனைவியின் பெயரில் உள்ள 73 செண்ட் விவசாய நிலத்திற்கான ஆவணங்களை பார்வையிட்டு, எனது விண்ணப்பத்தை சிபாரிசு செய்து மேலூர்

வருவாய் ஆய்வாளருக்கு அனுப்புவதாக கூறினார். பின்பு மேலூர் வருவாய் ஆய்வாளர் அவர்களை சந்தித்து அவரிடமும் எனது மனைவியின் பெயரில் உள்ள விவசாய நிலத்திற்கு ரூபாய் ஏழு இலட்சத்திற்கான செல்வ நிலை சான்றிதழுக்காக ஆன்லைனில் விண்ணப்பித்த விபரத்தையும், அதற்காக கருத்தம்புளியம்பட்டி கிராம நிர்வாக அலுவலரை சந்தித்த விபரத்தையும் கூறினேன். அவர் எனது மனைவியின் பெயரில் உள்ள நிலத்திற்கான ஆவணங்களை பார்வையிட்டு அதனை சிபாரிசு செய்து மேலூர் தலைமையிட துணை வட்டாட்சியருக்கு அனுப்பி வைப்பதாக கூறினார். பின்னர் இதுசம்மந்தமாக மேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்த துணை வட்டாட்சியர் திரு.மஸ்தான் என்பவரை சந்தித்து எனது செல்வ நிலை சான்றிதழ் குறித்து கேட்டபோது, அவர் அதற்கு ரூ.2700/- அரசாங்கத்திற்கு வங்கி மூலமாக கட்ட வேண்டும் என்று கூறினார். மேலும் அவர் இதுசம்மந்தமாக எனது மனைவியின் செல்போன் எண். 84891 88219-க்கு பணம் கட்ட வேண்டிய விவரம் குறித்து தகவல் வரும் என்றார். அதன்படி வந்த தகவலின் பேரில் பணம் ரூ.2,700/-ஐ மேலூர் SBI வங்கி கிளையில் செலுத்தி அதற்கான ரசீதை இ.சேவை மையத்தில் கொடுத்து ஆன்லைனில் பதிவு செய்தேன். அதன்பேரில் எனது மனைவியின் பெயரில் ரூபாய் ஏழு இலட்சத்திற்கான செல்வ நிலை சான்றிதழை ஆன்லைன் மூலமாக கிடைக்கப்பெற்றேன். பின்பு அந்த செல்வ நிலை சான்றிதழுடன், 73 செண்ட் நிலத்திற்கான அசல் பத்திரம், எனது மனைவியின் புகைப்படம் மற்றும் ஆதார் அட்டை நகல் ஆகியவற்றுடன் மகேந்திரா வங்கியில் கொடுத்து பணம் அதிகம் தேவைபட்டதால் ரூபாய் ஏழு இலட்சத்திற்கு பதிலாக, பத்து இலட்சம் ரூபாய் கடனாக வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அங்கிருந்த வங்கி ஊழியர் எனது மனைவியின் பெயரில் உள்ள நிலத்திற்கு ரூபாய் 14 இலட்சத்திற்கு செல்வ நிலை சான்றிதழ் பெற்று வந்தால் தான் ரூபாய் பத்து இலட்சம் கடன் தருவதாக கூறினார். எனவே நான் மீண்டும் கடந்த 06.08.2022ம் தேதி ரூ.60/- செலுத்தி எனது மனைவி பெயரில் ரூபாய் 14 இலட்சத்திற்கு செல்வ நிலை சான்றிதழ் பெற வேண்டி, மேலூரில் தாலுகா அலுவலக வளாகத்தில் உள்ள இ.சேவை மையத்தில் அதற்காக விண்ணப்பித்து அத்துடன் எனது மனைவியின் ஆதார் அட்டை, அவரது பெயரில் உள்ள 73 செண்ட் நிலத்திற்கான பட்டா, சிட்டா மற்றும் வில்லங்க சான்றிதழ்களை இணைத்து ஆன்லைனில் விண்ணப்பம் செய்தேன். அந்த விண்ணப்பத்தின் எண்.TN-1720220806127 ஆகும். அதற்கு ஒப்புகை சீட்டு வழங்கினார்கள். பின்பு இதுசம்மந்தமாக ஏற்கனவே ரூபாய் ஏழு இலட்சத்திற்கான செல்வ நிலை சான்றிதழ் பெறுவதற்கு சந்தித்த

கருத்தம்புளியம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மேலூர் வருவாய் ஆய்வாளர் ஆகியோரை சந்தித்து ரூபாய் 14 இலட்சத்திற்கான செல்வ நிலை சான்றிதழ் பெறுவதற்கு எனது மனைவியின் பெயரில் விண்ணப்பித்த விவரம் மற்றும் அதற்கான ஆவணங்களை காண்பித்தேன். அவர்கள் அதனை சிபாரிசு செய்து மேலூர் துணை வட்டாட்சியருக்கு அனுப்புவதாக கூறினார்கள். பின்னர் கடந்த 18.08.2022ம் தேதி மதியம் சுமார் 3 மணியளவில் மேலூர் தாலுகா அலுவலகத்திற்கு சென்று அங்கு பணியிலிருந்த தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.மணிகண்டன் அவர்களை சந்தித்து ரூபாய் 14 இலட்சத்திற்கான செல்வ நிலை சான்றிதழை எனது மனைவியின் பெயரில் பெறுவதற்காக ஆன்லைனில் விண்ணப்பித்த விபரத்தை கூறி, நான் ஏற்கனவே எனது மனைவியின் பெயரில் ரூபாய் ஏழு இலட்சத்திற்கான செல்வ நிலை சான்றிதழ் வாங்கிய விவரத்தையும், ஆனால் தற்போது மகேந்திரா வங்கியில் ரூபாய் பத்து இலட்சம் விவசாய கடன் வழங்குவதற்கு ரூ.14 இலட்சத்திற்கு செல்வ நிலை சான்றிதழ் பெற்று வரும்படி கூறிய விவரத்தை சொன்னேன். மேலும் இதுசம்மந்தமாக அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு என்று கேட்டேன். அதற்கு துணை வட்டாட்சியர் மணிகண்டன் அவர்கள், அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் பின்னால் கட்டி கொள்ளலாம், முதலில் செல்வ நிலை சான்றிதழ் பெற நான் பரிந்துரை செய்து, வட்டாட்சியரிடம் ஒப்புதல் பெற்று, அதனை பெற்று உங்களுக்கு வழங்குவதற்கு எனது செலவுக்கு ரூ.20,000/- கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை பிறகு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இதுசம்மந்தமாக தகவல்களை எனது மனைவி மாலதியிடம் சொன்னேன். அவர் உடனே விவசாய கடன் வாங்கலாம் என்றால் லஞ்சமாக பணம் கேட்பது மனதுக்கு மிகவும் வருத்தமாக உள்ளது என்று சொன்னார். பின்னர் நான் மேற்படி பணத்தை ஏற்பாடு செய்ய முயன்றும் முடியவில்லை, விவசாயமும் சரியாக இல்லை. கொரோனா காலம் என்பதால் விவசாயத்திற்கு சரியான விலை கிடைக்கவில்லை. இந்த விவரத்தை சொல்லி பணம் குறைக்கலாம் என்று எண்ணி நேற்று 22.08.2022ம் தேதியன்று மதியம் சுமார் 12 மணியளவில் மேலூர் வட்டாட்சியர் அலுவலகம் சென்று துணை வட்டாட்சியர் திரு.மணிகண்டன் அவர்களை சந்தித்து எனது செல்வ நிலை சான்றிதழ் சம்மந்தமாக கேட்டேன். உடனே அவர் நான் கேட்ட பணம் ரூ.20,000/- கொண்டு வந்துள்ளீர்களா என கேட்டார். உடனே நான் கொரோனா காலம் என்பதால் வருமானம் ஒன்றும் இல்லை, கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கெஞ்சினேன். அதற்கு அவர் நான் ஏற்கனவே உனக்கு குறைத்துதான்

சொல்லியுள்ளேன். நாங்கள் கொடுக்கும் செல்வ நிலை சான்றிதழை வைத்து சுளையாக லட்ச கணக்கில் பணம் பெறுவீர்கள். அதில் இது ஒன்றும் பெரிய தொகை இல்லையென்று கோபமாக கூறினார். மேலும் அவர் நான் கேட்ட பணம் ரூ.20,000/-த்தை நாளை (23.08.2022) காலை எனது அலுவலகத்தில் என்னை பார்த்து கொடுத்தால்தான், உனக்கு செல்வநிலை சான்றிதழ் முறையாக கிடைக்க சிபாரிசு செய்து ஏற்பாடு செய்கிறேன், இல்லையென்றால் நீ அலைந்து கொண்டுதான் இருக்க வேண்டும் என்று கறராக கூறிவிட்டார். நான் சரி சார் ஏற்பாடு செய்கிறேன் என்று அவரிடம் சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து எனது மனைவியிடம் விவரத்தை தெரிவித்தேன். அவரும் ரூ.20,000/- லஞ்சமாக கேட்ட விவரத்தை கேள்விப்பட்டு, வருமானம் இல்லாத காலத்தில் லஞ்சம் கேட்கிறார்களே என்று வருத்தப்பட்டார். இது எனக்கும் மிகவும் வருத்தமாக இருந்தது. எனவே எனது மனைவியின் பெயரில் செல்வ நிலை சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்து தருவதற்கு ரூ.20,000/- லஞ்சமாக கேட்கும் மேலூர் துணை வட்டாட்சியர் திரு.மணிகண்டன் அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே இன்று இதுசம்மந்தமாக என்னிடம் ரூ.20,000/- லஞ்சம் கேட்கும் மேலூர் துணை வட்டாட்சியர் திரு.மணிகண்டன் மீது நடவடிக்கை எடுக்க இம்மனுவை கொடுக்கிறேன். இத்துடன் நான் கடந்த 11.06.2022 மற்றும் 18.08.2022ம் தேதியன்று விண்ணப்பித்த ஆன்லைன் ஒப்புகை சீட்டு, எனது மனைவியின் பெயரில் கடந்த 08.07.2022ம் தேதியன்று ரூபாய் ஏழு இலட்சத்திற்கு வழங்கிய செல்வ நிலை சான்றிதழின் நகல், எனது மனைவியின் ஆதார் அட்டை நகல், அவரது பெயரில் உள்ள 73 செண்ட் நிலத்தின் பட்டா, சிட்டா மற்றும் வில்லங்க சான்றிதழ் நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். மேலூர் துணை வட்டாட்சியர் திரு.மணிகண்டன் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.20,000/-த்தை (40 ஐநூறு ரூபாய் நோட்டுகள்) கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு (sd/- XXXXX) S.பிரபு, 23.8.2022.

Sir, received the typed complaint on 23.08.2022 at 09.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai Vigilance and Anti Corruption in Cr. No. 06/2022 u/s 7 of PC Act 1988 as amended by the Prevention of

Corruption (Amendment) Act 2018 at 09.45 hrs., and took up investigation (Sd/- XXXXX) P.M.Ramesh Prabhu, Inspector / V&AC, Madurai. 23/08/2022.

Original FIR along with the original typed complaint of Tr.S.Prabhu, S/o. Selvam, Door No. 53, Karuthapuliyampatti, Middle Street, Melur, Madurai District and enclosed documents are submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

(P.M.Ramesh Prabhu)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.
(23/08/2022)